# சிரேஷ்ட பிரஜைகள் சேமிப்புக் கணக்குகள்– நியதிகளும் நிபந்தனைகளும்

பின்வரும் நியதிகளும் நிபந்தனைகளும் (இதனகத்து இதன் பின்னர் வங்கி எனக் குறிப்பிடப்படும்) நேஷன்ஸ் ட்ரஸ்ற் வங்கி PLC-PQ118 இல் திறந்து பேணப்படும் சிரேஷ்ட பிரஜைகள் சேமிப்புக் கணக்குகளைக் கட்டுப்படுத்தும்.

"சிரேஷ்ட பிரஜை" என்பது 60 வயதுக்கு மேற்பட்ட ஆள் எனப் பொருள்படுதல் வேண்டும்.

1. சிரேஷ்ட பிரஜைகள் சேமிப்புக் கணக்குகள் சிரேஷ்ட பிரஜைகளாக உள்ள தனி ஆட்களால் சேமிப்புப் புத்தக சேமிப்புக் கணக்குகளாக அல்லது கணக்குக் கூற்று சேமிப்புக் கணக்குகளாகத் திறக்கப்படலாம்.

2. வங்கியினால் ஏற்றுக்கொள்ளப்படும் ஆளடையாளத்தை நிரூபிக்கும் ஒரு ஆவணம் தொடர்பாக வங்கியினால் அங்கீகரிக்கப்பட்ட சாதகமான அடையாளப்படுத்தல் மூலம் ஒரு சிரேஷ்ட பிரஜையினால் / பிரஜைகளினால் கணக்கு திறக்கப்படலாம். (உதாரணம்: தேசிய அடையாள அட்டை, செல்லபடியாகும் கடவுச்சீட்டு, சாரதி அனுமதிப் பத்திரம் மற்றும் தொடர்பாடல் முகவரியை உறுதிப்படுத்தும் ஒரு ஆவணம் (உதாரணம்: அண்மைக்கால பயன்பாட்டுப் பட்டியல், கணக்குக் கூற்று)

3. சிரேஷ்ட பிரஜை கணக்கு,

   (அ) ஒரு தனி ஆளினால் அவரின் பெயரில்,

   (ஆ) பணம் மீளப்பெறும் அதிகாரம் ஆணையில் குறிப்பிடப்பட்டு தெளிவான அறிவுறுத்தல்களுக்கு அமைவாக, பிரதான கணக்கு வைத்திருப்பவர் சிரேஷ்ட பிரஜையாக இருத்தல் வேண்டும் என்பதுடன் இரண்டு அல்லது மேற்பட்ட ஆட்கள் இணைந்து தங்கள் பெயர்களில் கூட்டாகவும் திறக்கப்படலாம்.

4. ஒவ்வொரு சிரேஷ்ட பிரஜை கணக்கிற்கும் ஒரு இலக்கம் வழங்கப்படும். அவ்விலக்கம் வங்கியுடன் மேற்கொள்ளும் ஒவ்வொரு கடிதத் தொடர்பாடலிலும் எல்லா வைப்புச் சிட்டைகளிலும் பணம் மீளப்பெறும் படிவங்களிலும் குறிப்பிடப்படுதல் வேண்டும். அவ்வாறு தரப்பட்ட இலக்கத்தை கணக்கு வைத்திருப்பவருக்கு அறிவித்து மாற்றுவதற்கான உரிமையை வங்கி கொண்டுள்ளது.

5. இணைந்த சிரேஷ்ட பிரஜை கணக்கின் ஒரு தரப்பினர் மரணிக்குமிடத்து, உயிர்வாழ்பவர் / உயிர்வாழ்வோர் மரணம் சம்பவித்த திகதியைக் குறிப்பிட்டு இந்தத் தகவலை உடனடியாக வங்கிக்குத் தெரிவித்தல் வேண்டும். அத்தகைய கணக்குகள் மீதான கொடுக்கல் வாங்கல்கள் நிலவும் சட்டத்தினால் கட்டுப்படுத்தப்படுதல் வேண்டும். தனது பெயரில் சிரேஷ்ட பிரஜை கணக்கொன்றை வைத்திருக்கும் ஒரு தனி ஆள், இலக்கம் 26இல் தரப்பட்டுள்ள ஏற்பாடுகளுக்கு அமைவாக, கணக்கு வைத்திருப்பவர் மரணிக்கும் சந்தர்ப்பத்தில், கணக்கில் உள்ள மீதியின் பயனாளியாக / பயனாளிகளாக, வங்கியினால் வழங்கப்படும் பெயர்குறித்து நியமிக்கும் படிவத்தை பூர்த்தி செய்வதன் மூலம், ஒன்று அல்லது அதற்கு மேற்பட்ட ஆளை / ஆட்களை பெயர்குறித்து நியமித்தல் வேண்டும்.

6. வங்கியினால் கணக்கு வைத்திருப்பவருக்கு வழங்கப்படும் கணக்குப் புத்தகம் அல்லது பருவ கால கணக்குக் கூற்று கணக்கு வைத்திருப்பவரினால் கவனமாகப் பாதுகாக்கப்படுதல் வேண்டும்.

**கணக்குப் புத்தக சேமிப்புக் கணக்குகளுக்கு மாத்திரம்**

7. கணக்கு வைத்திருப்பவரால் கணக்குப் புத்தகத்தில் எவ்வித பதிவும் மேற்கொள்ளப்படலாகாது. தேவைப்படும்போது அவர் அந்தக் கணக்குப் புத்தகத்தை வங்கியில் சமர்ப்பித்தல் வேண்டும். அது கைமாற்றத் தக்கதோ அல்லது பிறருக்கு குறித்தொதுக்கக்கூடியதோ அல்ல என்பதுடன் அதனை ஒரு பிணையமாக வழங்க முடியாது. ஒவ்வொரு கொடுக்கல் வாங்கலின் பின்னரும் பதிவின் செவ்வைத் தன்மையை உறுதி செய்வதற்காக அது பரிசீலிக்கப்படுதல் வேண்டும். ஏதேனும் தவறுகள் இருப்பின் அது வங்கிக்கு உடனடியாகத் தெரிவிக்கப்படுதல் வேண்டும். கணக்குப் புத்தகம் தொலைந்துபோகும் அல்லது அழிந்துபோகும் சந்தர்ப்பத்தில் கணக்கு வைத்திருப்பவர் உடனடியாக வங்கிக்குத் தெரிவித்தல் வேண்டும்.

8. கணக்குப் புத்தகத்தில் பதியப்படாது வைப்புகள் இடப்பட்டிருக்கலாம் அல்லது தொகைகள் அறவிடப்பட்டு/பற்று வைக்கப்பட்டிருக்கலாம் என்பதால், கணக்குப் புத்தகம் சரியான மீதியைக் காட்டும் எனக் கருத முடியாது.

9. வழங்கப்பட்ட கணக்குப் புத்தகம் கிரமமாக இற்றைப்படுத்தப்படுதல் வேண்டும். கணக்குப் புத்தகத்தில் இறுதியாக பதிவுசெய்யப்பட்ட கொடுக்கல் வாங்கல் நிகழ்ந்து 3 மாதங்களினுள் கணக்குப் புத்தகம் இற்றைப்படுத்தப்படாவிடில், பிரதிகள்,அறிவுறுத்தல்கள் அல்லது கொடுக்கல் வாங்கல் விபரங்கள் வங்கியிடமிருந்து கோரப்படலாம். இந்தச் சேவையை வழங்குவதற்காக ஏதேனும் கட்டணத்தை விதிப்பதற்கான உரிமையை வங்கி கொண்டுள்ளது.

**கணக்குக் கூற்று சேமிப்புக் கணக்குகளுக்கு மாத்திரம்**

10. கணக்குக் கூற்று கிடைக்கப்பெறாவிடின், கூற்றுச் சுழற்சி முடிவடைந்து 10 நாட்களினுள் வங்கிக்குத் தெரிவித்தல் வேண்டும்.பதிவின் செவ்வைத் தன்மையை உறுதிப்படுத்துவதற்காக ஒவ்வொரு

கூற்றையும் பரிசோதிப்பதற்கு கணக்கு வைத்திருப்பவர் உடன்படுகின்றார். கணக்குக் கூற்றில் ஏதேனும் தவறுகள் இருப்பின் அந்தக் கூற்று கிடைக்கப்பெற்றதிலிருந்து 14 நாட்களினுள் வங்கிக்கு தெரிவித்தல் வேண்டும்.

11. கணக்கு வைத்திருப்பவர் தனது கணக்குக் கூற்றுகளின் பிரதிகளைப் பாதுகாத்து வைத்திருப்பதற்கு பொறுப்பாளியாவார். வங்கியிடமிருந்து கணக்குக் கூற்றுகளின் பிரதிகள் கோரப்படின், வங்கியின் பிரசுரிக்கப்பட்ட தீர்வைகளுக்கு இணங்க இந்தச் சேவையை வழங்குவதற்காக கட்டணங்களை விதிப்பதற்கான உரிமையை வங்கி கொண்டுள்ளது.

**வைப்புகள்**

12. வங்கிக்கு எழுதப்படாத உண்டியல்களும் ஏனைய கொடுப்பனவுக் கட்டளைகளும் கொள்வனவு செய்யப்படவேண்டுமா அல்லது சேகரிப்புக்காக அனுப்படல் வேண்டுமா என்பதை வங்கி அதன் முழுமையான தற்றுணிபின் பிரகாரம் தீர்மானிக்கும்.கொள்வனவு ஒன்றைத் தொடர்ந்து செலுத்தும் வங்கியினால் காசோலை மறுக்கப்படும் சந்தர்ப்பத்தில், கொள்வனவு செய்யப்பட்ட எல்லா பொருட்கள் தொடர்பாகவும் வங்கி (கட்டணங்கள் உள்ளடங்கலாக) எல்லா முழுமையான துணை ஆதாரங்களையும் நிறுத்திவைக்கும். மறுக்கப்பட்ட காசோலை பற்றிய அறிவித்தல் கிடைத்தவுடன் சிரேஷ்ட பிரஜை கணக்கில் பற்று வைக்கப்படும்.

13. வங்கிக்கு எழுதப்பட்ட உண்டியல்கள் / காசோலைகள் சிரேஷ்ட பிரஜை சேமிப்புக் கணக்கின் கடனுக்காகச் செலுத்தும்போது, வங்கி அதன் பிரசுரிக்கப்பட்ட தீர்வைக்கு இணங்க கையாளல் கட்டணங்களை கழிக்கும். அத்தகைய வைப்புகள் மீதான பெறுமதித் திகதி நிலவும் வங்கியின் கொள்கையின் பிரகாரம் வங்கியினால் தீர்மானிக்கப்படும். ஒரு சேமிப்புக் கணக்கின் பெயரில் வரவு வைப்பதற்காக வங்கிக்கு எழுதப்படாத உண்டியல்கள் / காசோலைகள் கொள்வனவு செய்யப்படும்போது, சிரேஷ்ட பிரஜை சேமிப்புக் கணக்கில் வரவில் இடும்போதான கருவியின் முகப்பெறுமதியின் கையாளல் கட்டணத்திற்கு மேலதிகமாக கழிவுக் கட்டணங்களை வங்கி கழிக்கும்.

14. சிரேஷ்ட பிரஜை சேமிப்புக் கணக்கொன்றைத் திறப்பதற்கான ஆகக்குறைந்த ஆரம்ப வைப்பு ரூபா 10000 அல்லது காலத்துக்குக் காலம் வங்கி நிர்ணயிக்கக்கூடியவாறான அத்தகைய ஏனைய தொகையாகும். விதிவிலக்கான சந்தர்ப்பங்களில், குறைவான அல்லது கூடுதலான ஆரம்ப வைப்புகளுடன் கணக்குகளைத் திறப்பதற்கு வங்கி அதன் முழுமையான தற்றுணிபின் பிரகாரம் பரிசீலனைக்கு எடுத்துக்கொள்ளும். ஆயினும், அது நிபந்தனை 22இல் உள்ளடக்கப்பட்டுள்ள ஏற்பாடுகளுக்கு அமைவாக இருக்கும்.

15. வைப்புகள் விரும்பியவாறு அடிக்கடி மேற்கொள்ளப்படலாம். வைப்புத் துண்டை உறுதிப்படுத்துவதன் மூலம், கணக்குப் புத்தகத்தில் பதிவொன்றை மேற்கொள்வதன் மூலம், வங்கி முனையத்தில் அல்லது வைப்புச் சிட்டையின் மீது வங்கியின் அதிகாரம் அளிக்கப்பட்ட பணியாளர் ஒருவரால் தனது கைப்பட வைப்புச் சிட்டையில் ஒப்பமிடுவதன் மூலம் எல்லா வைப்புகளும் உறுதிப்படுத்தப்படும். அதிகாரமளிக்கப்பட்ட ஒப்பங்களின் ஒரு பட்டியலையும் வங்கி முனைய மாதிரியின் அச்சுப் பிரதியையும் கோரிக்கையின் பிரகாரம் பார்வையிடலாம்.

16. வங்கியின் பெயரில் எழுதப்பட்டு பயனாளியின் பெயரும் சிரேஷ்ட பிரஜை கணக்கு இலக்கமும் குறிப்பிடப்பட்டுள்ள காசோலை வைப்புகள் வங்கிக் கிளை முகாமையாளரின் அங்கீகாரத்துடன் வைப்பில் இடப்படலாம் என்பது நீங்கலாக காசு வைப்புகள் மாத்திரமே அனுமதிக்கப்படும். காசோலை வைப்புகள் அனுமதிக்கப்படுமிடத்து, வாடிக்கையாளரின் சிரேஷ்ட பிரஜை சேமிப்புக் கணக்கில் அவ்வாறு வைப்பில் இடப்பட்ட காசோலைகளின் வருவாய் (ஏதேனும் இருப்பின்) வரவில் இடப்படாவிடில், வங்கிக் கிளைகளில் உள்ள காசோலை வைப்புப் பெட்டிகளில் வைப்பில் இட்டதாக சொல்லப்படும் ஏதேனும் காசோலைகளுக்கு (ஏதேனும் தற்காலிக அறிவுறுத்தலைச் சமர்ப்பித்தலினால் தடைபெறாது) வங்கி வாடிக்கையாளருக்குப் பொறுப்புடையதாதல் ஆகாது. வைப்புப் பெட்டியினால் வழங்கப்படும் தற்காலிக அறிவுறுத்தலினால் தடைபெறாது, அவ்வாறு வைப்பில் இடப்பட்ட காசோலைகள் வாடிக்கையாளரின் சிரேஷ்ட பிரஜை சேமிப்புக் கணக்கில் வரவில் இடப்படாதவிடத்து, காசோலை வைப்புப் பெட்டியில் இடப்பட்டதாகச் சொல்லப்படும் காசோலைகள் தொடர்பான எந்தவொரு கோரலையும் எந்தவொரு சூழ்நிலையிலும் எந்தவொரு காரணத்திற்காகவும் வங்கி பொறுப்பேற்காது. வாடிக்கையாளர் கணக்குகளில் வரவில் இடப்பட்ட காசோலைகள் சேகரிப்புக்காக மட்டுமே ஏற்றுக்கொள்ளப்படுவதுடன் வழங்கிய வங்கியினால் தீர்க்கப்படும்வரை, அவ்வருவாய்கள் மீண்டும் பெறுவதற்கு கிடைக்கக்கூடியதாக இருக்காது. நிதி கிடைக்கக்கூடிய திகதி குறித்துக்காட்டும் நோக்கத்துக்காக மட்டுமே காட்டப்படுகின்றன. சிரேஷ்ட பிரஜை சேமிப்புக் கணக்குகள் காசோலைகளின் சேகரிப்புக்காகவும் தீர்ப்பனவுக்காகவும் கருதப்பட்டவை அல்ல என்பதுடன்கொண்டுவருபவருக்கு, வைப்பாளருக்கு அல்லது மூன்றாம் தரப்பினர்களுக்கு செலுத்தக்கூடிய காசோலை வைப்புகள், பங்கிலாப உரிமை ஆணை மற்றும் ஏனைய கருவிகளை மறுப்பதற்கான அல்லது ஏற்றுக்கொள்வதற்கான உரிமை வங்கிக்கு உண்டு.

**பணம் மீளப்பெறல்**

17.பிரயோகிக்கக்கூடிய விதிகள் மற்றும் ஒழுங்குவிதிகளுக்கு அமைவாக, தன்னியக்க வங்கி இயந்திரங்கள்(ATM) அல்லது வங்கிக் கிளைகள் ஊடாக விரும்பியவாறு அடிக்கடி பணம் மீளப்பெறப்படலாம். பற்று அட்டை கட்டணங்கள் ஏனைய வங்கிகளின் தன்னியக்க வங்கி இயந்திரங்களிலிருந்து பணம் மீளப்பெறுவதற்கான மீளப்பெறல் கட்டணங்கள் வங்கியில் நிலவும் வீதத்தில் செலுத்தக்கூடியதாக இருத்தல் வேண்டும். கிளைகளில் பணம் மீளப்பெறுதல் நிபந்தனை 22இல் உள்ளடக்கப்பட்டுள்ள ஏற்பாடுகளுக்கு அமைவாக சாதகமான அடையாளம் காணலின் மீதமைவாகவும் ஒரு கணக்குப் புத்தகம் வழங்கப்பட்டுள்ள சிரேஷ்ட பிரஜை சேமிப்புக் கணக்கைப் பொறுத்தவரை கணக்குப் புத்தகத்தை சமர்ப்பிப்பதன் மூலமும் அனுமதிக்கப்படும். கணக்குப் புத்தகத்தைச் சமர்ப்பிக்காது கிளை கரும பீடங்களில் காசை மீளப்பெறுவதற்கு (கணக்குப் புத்தகம் இன்றி

பணம் மீளப்பெறுதல்) வங்கி அதன் முழுமையான தற்றுணிபின் பிரகாரம் அனுமதிக்கலாம்.வங்கி அதன் முழுமையான தற்றுணிபின் பிரகாரம் வங்கிக் கிளைகளில் அத்தகைய ''கணக்குப் புத்தகம் அற்ற'' பணம் மீளப்பெறுதலுக்கு ஒரு கட்டணத்தை அறிமுகம் செய்யலாம் அல்லது விதிக்கலாம். பொருத்தமானவிடத்து, முத்திரைத் தீர்வை மற்றும் ஏனைய வரிகள் அல்லது விதிப்பனவுகள் கணக்கு வைத்திருப்பவரினால் செலுத்தப்பட வேண்டும் என்பதுடன் சட்டத்தின் பிரகாரம் வங்கியினால் விதித்துரைக்கப்படும் விதத்துக்கிணங்க செலுத்தப்படுதலும் வேண்டும். பணம் மீளப்பெறுதல் காசோலை அல்லது ஏனைய கருவி மூலமாக மேற்கொள்ள முடியாமல்போகலாம்.

18. சிரேஷ்ட பிரஜை சேமிப்புக் கணக்கின் பற்றுக் கொடுப்பனவுகளை மேற்கொள்வதற்கு நியாயமான காலப்பகுதியினுள் கணக்கு வைத்திருப்பவரிடமிருந்து அஞ்சல் மூலம் கிடைக்கப்பெறும் அல்லது வங்கியின் ஏதேனும் கிளைக்கு வழங்கப்படும் மெய்யுறுதிப்படுத்தப்பட்ட எழுத்திலான அறிவுறுத்தல்களின் பிரகாரம் மாத்திரமே (நிலையியல் அறிவுறுத்தல்கள் உள்ளடங்கலாக) வங்கி செயற்படும். அத்தகைய அறிவுறுத்தல்களின் பிரகாரம் குறித்த காலப்பகுதியினுள் வங்கி செயற்படத் தவறியமை காரணமாக எழும் ஏதேனும் கோரல்கள், இழப்புகள் அல்லது கிரயங்களுக்கு வங்கி ஆளாதல் அல்லது பொறுப்பாதல் ஆகாது. வங்கிக்கும் வாடிக்கையாளருக்கும் இடையில் குறித்த உடன்பாடு இன்றி தொலைநகல், இலத்திரனியல் அஞ்சல் அல்லது ஏதேனும் வேறு ஊடகங்கள் ஊடாக கிடைக்கப்பெறும் ஏதேனும் அறிவித்தல்களை வங்கி ஏற்றுக்கொள்ளாது.

**வட்டி**

19. நாளாந்தம் கிடைக்கக்கூடியதாக உள்ள மீதியின் அடிப்படையில் கணிக்கப்பட்ட நடைமுறை வீதத்திலான வட்டி சிரேஷ்ட பிரஜை சேமிப்புக் கணக்கில் மாதாந்தம் (வழக்கமான மாதத்தின் இறுதி நாளில்) வரவில் இடப்படும். வட்டிக் கொடுப்பனவுகள் நிபந்தனைகள் 20 மற்றும் 22இல் உள்ளடங்கிய ஏற்பாடுகளுக்கு அமைவானவையாகும்.

20. எல்லா வாடிக்கையாளர்களும் உள்நாட்டு இறைவரித் திணைக்களத்தினால் தேவைப்படுத்தப்படுகின்றவாறு சிரேஷ்ட பிரஜை சேமிப்புக் கணக்கு திறக்கும் படிவங்களில் அவர்களின் வரி அந்தஸ்து மற்றும் வதிவிட அந்தஸ்து பற்றிய நியதிச்சட்ட பிரகடனத்தைப் பூர்த்தி செய்தல் வேண்டும். வாடிக்கையாளரினால் மேற்கொள்ளப்பட்ட நியதிச் சட்டப் பிரகடனம் அப்போதுள்ளவையும் புதியவையுமான எல்லா கணக்குகளுக்கும் ஏற்புடையதாவதுடன் அதே ஆணையினால் கட்டுப்படுத்தப்படும். வட்டிக் கொடுப்பனவுகள் மீது செலுத்த வேண்டிய பிடித்து வைத்திருக்கும் வரி அல்லது ஏதேனும் வேறு வரி உள்நாட்டு இறைவரித் திணைக்களத்தினால் அல்லது காலத்துக்குக் காலம் அதிகாரம் அளிக்கப்பட்ட அத்தகைய வேறு குழுமத்தினால் விதித்துரைக்கப்பட்டவாறாக அக்காலப்பகுதிக்கு செலுத்தவேண்டிய வட்டியிலிருந்து (அத்தகைய வீதத்தில் அல்லது வீதங்களில்) வங்கியினால் கழிக்கப்படும். பின்னர் வங்கியிடமிருந்து உள்நாட்டு இறைவரித் திணைக்களத்தினால் கோரப்படின் செலுத்தப்படாத பிடித்து வைத்திருக்கும் வரிகளை (எவ்வித அறிவித்தலும் இன்றி) அறவிடுவதற்கான உரிமை வங்கிக்கு உண்டு.

**பொது**

21. கணக்கு வைத்திருப்பவரின் முகவரியில் ஏதேனும் மாற்றம் ஏற்படின் உடனடியாக வங்கிக்கு அறிவித்தல் வேண்டும்.

22. ஏதேனும் கூற்று சேமிப்புக் கணக்கில் மீதி ரூபா 1000/-ஐ விட குறைவடையுமிடத்து, வங்கி அதன் தற்றுணிபின் பிரகாரம் கொடுக்கல் வாங்கல் கட்டணத்தை அத்துடன்/ அல்லது ஒரு சேவைக் கட்டணத்தை விதிக்கலாம் அத்துடன் / அல்லது வட்டியைப் பிடித்துவைத்திருக்கலாம். வங்கி அதன் முழுமையான தற்றுணிபின் பிரகாரம், கிளை கருமபீட கொடுக்கல் வாங்கல்கள் அத்துடன்/அல்லது தன்னியக்க வங்கி இயந்திர கொடுக்கல் வாங்கல்கள் மீது பிரத்தியேகமான கொடுக்கல் வாங்கல் கட்டணங்களை அறிமுகப்படுத்தலாம். கணக்கு திறந்த திகதியில் இருந்து மூன்று மாத காலப்பகுதி ஒன்றினுள் வாடிக்கையாளரினால் மூடப்பட்ட சிரேஷ்ட பிரஜை கணக்கின் மீது ஒரு கையாளல் வரி விதிக்கப்படும். தற்போது பிரயோகிக்கப்படும் கட்டணங்கள் மற்றும் அறவீடுகள் வேண்டுகோளின் பிரகாரம் பெற்றுக்கொள்ளக்கூடிய வங்கியின் வரி கையேட்டில் உள்ளடக்கப்பட்டுள்ளன.

23. விதிக்கப்படும் சேவைக் கட்டணம் நடைமுறை மாதத்தில் அல்லது அதற்கடுத்த மாதத்தில் வாடிக்கையாளரின் கணக்கில் இருந்து பற்று வைக்கப்படலாம்.

24. சிரேஷ்ட பிரஜை சேமிப்புக் கணக்குகளில் காணப்படும் கூற்றுகளின் பிரதிகளை அத்துடன் / அல்லது கொடுக்கல் வாங்கல் பதிவுகளை 7 வருடங்களுக்கு மாத்திரமே வங்கி வைத்திருக்கும்.அத்தகைய பதிகள் எல்லாம் 7 வருடங்களின் பின்னர் அழிக்கப்படும் என்பதுடன் 7 வருடங்களின் பின்னர் கூற்றுகளின் பிரதிகளை அல்லது கொடுக்கல் வாங்கல் பதிவுகளை வழங்குவதற்கான ஏதேனும் பொறுப்பை அல்லது வகைகூறலை வங்கி பொறுப்பேற்காது.

25. இதன் கீழ் அனுப்பப்படும் ஏதேனும் அறிவித்தல் இறுதியாகப் பதிவுசெய்யப்பட்ட முகவரிக்கு தபாலில் அனுப்பப்பட்டு 7 நாட்களினுள் கணக்கு வைத்திருப்பவரால் பெறப்பட்டதாகக் கருதப்படும். கடிதம் அத்துடன் / அல்லது உள்நாட்டுப் பத்திரிகை அறிவித்தல் மூலம் அத்துடன் / அல்லது அறிவித்தல் பலகையில் காட்சிப்படுத்தல் அத்துடன் / அல்லது கூற்று செய்திகள் ஊடாக வழங்கப்படும் கட்டணங்கள் மற்றும் அறவீடுகளின் அத்துடன்/ அல்லது இந்த நியதிகளினதும் நிபந்தனைகளினதும் மாற்றங்கள் பற்றிய அறிவித்தல் அத்தகைய அறிவித்தலை கணக்கு வைத்திருப்பவருக்கு வழங்கப்படுவதாகக் கருதப்படும்.

26. காசு வைப்புகள் மற்றும் பணம் மீளப்பெறல், காசோலை வைப்புகள் மற்றும் ஏனைய பற்றுகள் / வரவுக் கொடுக்கல் வாங்கல்கள் பற்றிய அறிவுறுத்தல்கள் வங்கியின் முழுமையான தற்றுணிபின் பிரகாரம் மேற்கொள்ளப்பட்டாலன்றி,

தனிப்பட்ட வாடிக்கையாளர் அறிவுறுத்தல்களை வங்கி அஞ்சல் செய்யமாட்டாது.

27. வங்கி அறிவித்தல் இன்றி வங்கிக்கான ஏதேனும் பொறுப்புகளுடன் உங்கள் கணக்கை / கணக்குளை இணைக்கலாம் அல்லது ஒன்றுசேர்க்கலாம் என்பதுடன் அத்தகைய பொறுப்புகள் உண்மையானவையாகவோ அல்லது எதிர்பாராதவையாகவோ, முதல் நிலையானவையாகவோ அல்லது ஒருங்கமைந்தவையாகவோ அத்துடன் தனித்தவையாகவோ அல்லது கூட்டானவையாகவோ இருப்பினும் ஏதேனும் வேறு கணக்கில் அல்லது ஏதேனும் வேறு விதத்தில் வங்கியிலிருந்து உங்களுக்குக் கிடைக்கவேண்டிய ஏதேனும் அத்தகைய கணக்குகளின் அல்லது ஏதேனும் வேறு தொகையின்/ தொகைகளின் கணக்கிற்குக் கிடைக்கவேண்டிய ஏதேனும் தொகையுடன் / தொகைகளுடன் ஒதுக்கலாம் அல்லது மாற்றலாம்.

28. வங்கி கணக்கு வைத்திருப்பவரின் இறுதியாகப் பதிவு செய்யப்பட்டட முகவரிக்கு ஏழு நாட்கள் முன்கூட்டிய எழுத்திலான அறிவித்தலை வழங்கிய பின்னர் காரணங்கள் வழங்காது சிரேஷ்ட பிரஜை சேமிப்புக் கணக்கை திறப்பதை மறுப்பதற்கு அத்துடன் / அல்லது சிரேஷ்ட பிரஜை சேமிப்புக் கணக்கை மூடுவதற்கான உரிமையை தன்னகத்தே கொண்டுள்ளது. கணக்குப் புத்தக சேமிப்புக் கணக்கைப் பொறுத்தவரை, ஆகக்குறைந்த மீதி 1000/- ரூபாவைக் கொண்ட கணக்கு வைத்திருப்பவரின் சிரேஷ்ட பிரஜை சேமிப்புக் கணக்கை தடைசெய்வதற்கும் அத்துடன் கூற்று சேமிப்புக் கணக்கைப் பொறுத்தவரை, ஆகக்குறைந்த மீதி 100/- ரூபாவைக் கொண்ட கணக்கு வைத்திருப்பவரின் கணக்கை தடைசெய்வதற்குமான உரிமையை வங்கி கொண்டிருப்பதுடன் சம்பந்தப்பட்ட கணக்கு மூடப்பட்டாலன்றி கணக்கு வைத்திருப்பவர் உரிய தொகைகளை திரும்பப்பெறுவதற்கு உரிதுடையவராகமாட்டார். அத்தகைய ஆகக்குறைந்த தடைசெய்யப்பட்ட தொகைகளைக் கொண்டதும் மூன்று (3) மாத காலப்பகுதிக்கு செயற்பாடற்றதுமான அத்தகைய கணக்குகளை மூடுவது பற்றிய ஏழு நாட்கள் முன்கூட்டிய எழுத்திலான அறிவித்தலை கணக்கு வைத்திருப்பவரின் இறுதியாகப் பதிவுசெய்யப்பட்ட முகவரிக்கு வழங்கியதன் பின்னர் அத்தகைய எல்லாக் கணக்குகளையும் மூடுவதற்கான உரிமையை வங்கி கொண்டுள்ளது. அத்தகைய சந்தர்ப்பங்களில், ஏழு நாட்கள் முன்கூட்டிய எழுத்திலான அறிவித்தல் காலப்பகுதி முடிவடைவதற்கு முன்னர் கணக்கு வைத்திருப்பவரிடமிருந்து கையுதிர்ப்பதற்கான அறிவுறுத்தல்கள் கிடைக்காதவிடத்து, கணக்கில் உள்ள மீதியை கட்டணங்களாக உள்ளீர்ப்பதற்கான உரிமையை வங்கி கொண்டுள்ளது.

29. இந்த நியதிகள் மற்றும் நிபந்தனைகளுக்கான திருத்தங்கள் சட்டத்தினால், அரசாங்க ஒழுங்குவிதிகளினால் அல்லது இலங்கை மத்திய வங்கியின் அறிவுறுத்தல்களினால் அவசியப்படுத்தப்படின், அவை தாமாகவே திருத்தியவாறு நடைமுறையில் இருக்கும்.

30. சிரேஷ்ட பிரஜை சேமிப்புக் கணக்கைத் திறக்கும் அல்லது தொடர்ந்து பேணும் எவரேனும் ஆள் ஒரு சிரேஷ்ட பிரஜை சேமிப்புக் கணக்கை நடத்துவதைக் கட்டுப்படுத்தும் வங்கியின் நியதிகளையும் நிபந்தனைகளையும் வாசித்து விளங்கிக்கொண்டு அதற்குக் கட்டுப்படுவதாகக் கருதப்படும். நிபந்தனை 25இல் உள்ளடக்கப்பட்டுள்ள ஏற்பாடுகளுக்கு அமைவாக, எந்தவொரு நேரத்திலும் இந்த நியதிகள் மற்றும் நிபந்தனைகளை மாற்றுவதற்கான, திருத்துவதற்கான அல்லது அவற்றுடன் எவற்றையேனும் சேர்ப்பதற்கான உரிமையை வங்கி கொண்டுள்ளது.

31. வாடிக்கையாளர் தொடர்பான கணக்கின் தகவல்களை உள்ளிட்ட எல்லா தரவுகளும் ஏதேனும் இடத்திற்கு மாற்றப்படலாம் அத்துடன் / அல்லது களஞ்சியப்படுத்தப்படலாம் அல்லது வைத்திருக்கப்படலாம் எனவும் வங்கியின், அதன் தலைமை அலுவலகத்தின், கிளை அலுவலகங்களின் அதிகாரம் அளிக்கப்பட்ட ஆளணியினால் வழங்கப்பட்ட ஏதேனும் தரவு நடைமுறைப்படுத்தும் சேவையினால் கணக்குக் கூற்றுகளை அச்சிட்டு அஞ்சல் செய்வதற்கு வங்கியினால் ஈடுபடுத்தப்படும் எவரேனும் ஆளினால் நிர்வாகம் மற்றும் உள்ளகக் கண்காணிப்புத் தேவைப்பாடுகளை உள்ளிட்ட ஏதேனும் நோக்கத்துக்கு அவர்களின் அபிப்பிராயத்தின் பிரகாரம் அத்தகைய மாற்றல், களஞ்சியப்படுத்தல் அத்துடன் / அல்லது அணுகுதல் அவசியமெனக் கருதும் ஏதேனும் அதனை ஒத்த சேவைகளின் ஏற்பாட்டினால் அணுகப்படலாம் என வாடிக்கையாளர் ஏற்றுக்கொண்டு உடன்படுகின்றார்.

32. பணம் தூய்தாக்கல், பயங்கரவாதி நிதியளிப்பு மற்றும் தடைகளுக்கு உள்ளாகக்கூடிய ஏதேனும் ஆட்களுக்கு அல்லது அமைப்புகளுக்கு நிதி அல்லது ஏனைய சேவைகளை ஏற்பாடு செய்தால் தொடர்பாக வங்கிக்குப் பிரயோகிக்கத்தக்க சட்டங்களுக்கு இணங்க செயற்படுமாறு வங்கி வேண்டப்படுகின்றது. வங்கியின் முழுமையானதும் தனிப்பட்டதுமான தற்றுணிபின் பிரகாரம், அத்தகைய சட்டங்கள் மற்றும் ஒழுங்குவிதிகளுக்கு இணங்க செயற்படுதல் பொருத்தமானது எனக் கருதும் ஏதேனும் நடவடிக்கையை மேற்கொள்வதற்கு வங்கி உரித்துடையதாகும்.

பின்வருவனவற்றினால் காரணமாக எவரேனும் தரப்பினர் துன்புறும் நட்டங்கள் (வரையறை இன்றி, இலாப அல்லது வட்டி நட்டம் ஆகியவை உள்ளடங்கலாக நேரடியான அல்லது பின்விளைவான) அல்லது சேதத்துக்கு வங்கி பொறுப்பாகாது.

(i) அத்தகைய எல்லா விதிகள் மற்றும் ஒழுங்குவிதிகளுக்கு இணங்க வங்கி பொருத்தமானது எனக் கருதும் ஏதேனும் நடவடிக்கைகளை முழுமையாக அல்லது பகுதியளவில் மேற்கொள்ளும் நியதிகள் மற்றும் நிபந்தனைகள் அல்லது கடப்பாடுகளின் கீழ் புரியும் ஏதேனும் அதன் கடமைகளினால் ஏற்படும் ஏதேனும் தாமதம் அல்லது தவறு.

அல்லது

(ii) இந்த வாசகத்தின் கீழான வங்கியின் ஏதேனும் உரிமைகளைப் பிரயோகித்தல்

ஏதேனும் பிரயோகிக்கத்தக்க சட்டங்கள் மற்றும் ஒழுங்குவிதிகளின் மீறுகைக்கு அமைவாக, நியாயமான அளவு அத்தகைய சூழ்நிலை உள்ளபோது அது அவ்வாறிருப்பதை வாடிக்கையாளருக்குத் தெரிவிப்பதற்கு வங்கி முயற்சிக்கும்.

33. ஏதேனும் சிரேஷ்ட பிரஜை சேமிப்புக் கணக்கில் மேற்கொள்ளப்பட்ட பிழையான பதிவுகள் பருவகால மீதிக்கூற்று வழங்கப்பட்டதன் அல்லது கணக்குப் புத்தகத்தை இற்றைப்படுத்தியதன் முன்னராயினும் பின்னராயினும் பற்றுப் பதிவின் மூலம் (பின்னோக்கிய பதிவு) ஊடாக வங்கியினால் திருத்தப்படலாம் அல்லது இரத்துச்செய்யப்படலாம். வட்டிக் கணிப்பீடு (அல்லது வேறு திரும்பல்) தொடர்பாக தவறான பதிவு மேற்கொள்ளப்பட்ட தினத்தில் இருந்தவாறு பின்னியல் பதிவுகளை வங்கி மேற்கொள்ளும்.

34. இதில் அடங்கியுள்ள நியதிகள் மற்றும் நிபந்தனைகளுக்கு மேலதிகமாக, கணக்கைத் திறப்பதற்கு முன்னர் எல்லா கணக்கு வைத்திருப்போருக்கும் வழங்கப்பட்ட வங்கியின் பொதுவான வணிக நிபந்தனைகளில் உள்ளடக்கப்பட்டுள்ள நியதிகள் மற்றும் நிபந்தனைகளுக்கு கணக்கு வைத்திருப்பவர் கட்டுப்படுதல் வேண்டும். இதில் உள்ளடங்கியுள்ள நியதிகள் மற்றும் நிபந்தனைகள் பொது வணிக நிபந்தனைகளில் உள்ளடக்கப்பட்டிருப்பினும் இல்லாவிடினும், கணக்கு வைத்திருப்பவர் அத்தகைய எல்லா நியதிகளுக்கும் நிபந்தனைகளுக்கும் முழுமையாகவும் சமத்துவமாகவும் கட்டுப்படுதல் வேண்டும்.

**விசேட நியதிகள்**

35. சிரேஷ்ட பிரஜை சேமிப்புக் கணக்குகளுக்கு கடன் வசதிகள் போன்ற விசேட உற்பத்திகள் வழங்கப்படலாம். எனினும், கடன் வசதி அரசாங்க ஓய்வூதியம் பெறும் கணக்கு வைத்திருப்போருக்கு மாத்திரமே பிரயோகிக்கத்தக்கது என்பதுடன் இந்தக் கடன் வசதியைக் கிடைக்கச் செய்வதற்காக அவர்களின் ஓய்வூதியத்தை சிரேஷ்ட பிரஜை சேமிப்புக் கணக்கிற்கு அனுப்பிவைக்குமாறு அவர்கள் வேண்டப்படுவர். மேலும், கணக்கு வைத்திருப்பவரின் செலவில் காப்புறுதியைப் பெறுதல் அத்தகைய கடன் வசதிகளைப் பெறுவதற்கான முன் தேவைப்பாடாக அமையலாம்.

36. கணக்கு வைத்திருப்பவர் வங்கியில் நிலையான வைப்புகளை இட்டு, மருத்துவ அவசர தேவை காரணமாக நிலையான வைப்பின் முதிர்ச்சிக்கு முன்னர் நிலையான வைப்பை திரும்பப் பெற்றால், எவ்வித தண்டப்பணமும் அறவிடப்படாது. எனினும், இந்த வசதியைப் பெறுவதற்காக கணக்கு வைத்திருப்பவர் வங்கியில் சிரேஷ்ட பிரஜை சேமிப்புக் கணக்கைப் பேணுதல் வேண்டும்.

37. கணக்கு வைத்திருப்பவர்களுக்கு வழங்கப்படும் விசேட உற்பத்திகள் அத்துடன் / அல்லது சேவைகள் அத்தகைய உற்பத்திகள் அத்துடன் / அல்லது சேவைகளுடன் பிரத்தியேகமாக வழங்கப்படும் நியதிகள் மற்றும் நிபந்தனைகளால் கட்டுப்படுத்தப்படுதல் வேண்டும்.

பொது நிபந்தனைகளை வாசித்து, விளங்கி கவனத்தில் கொண்டேன் எனவும் இந்த விசேட நிபந்தனைகள் வங்கியுடன் நான் மேற்கொள்ளும் உடன்படிக்கையின் நியதிகள் மற்றும் நிபந்தனைகளாக அமையும் எனவும் நான் இத்தால் உறுதிப்படுத்துகின்றேன்.

…………………………………………………………

வாடிக்கையாளரின் ஒப்பம்